அ.வ.எண். 60/2017 நாள்: 23.07.2026

பி.சா.3 திரு.வீரமணி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு சொந்தமாக சொத்துகள் உள்ளதா என்றால் இல்லை. எனது மனைவி ராஜம் பெயரில் சொத்துகள் உள்ளதால் என்றால் இல்லை. வழக்கு சொத்து வாதி கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா 2–வது அயிட்ட சொத்திற்கு எனது பெயரில் குத்தகை உரிமை பதிவு உள்ளதா என்றால் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல. நிலத்தின் உரிமையாளர் பெயருக்குதான் சிட்டா வழங்குவார்கள் என்றால் ஆமாம். பி.சா.ஆ.3 அடங்கல் கணக்கில் எனது பெயரோ எனது மனைவி, மகள் பெயரோ சாகுபடியாளர் என்று இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 சிட்டாவில் தாவா 2–வது இன சொத்து குறித்து கிராம நிர்வாக அலுவலர் சான்று எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான்.

2) பி.சா.ஆ.4–ல் பின்பக்கம் கிராம நிர்வாக அலுவலரின் கையொப்பமோ, அலுவலக முத்திரையோ இல்லை என்றால் சரிதான். அதேபோல் பி.சா.ஆ.4–ன் முன்பக்கம் 1421 பசலி என்றும் பின்பக்கம் 1412 பசலி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ஆகியவற்றில் எனது மனைவியின் பெயர் உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் சொத்து இல்லை என்று முன்பு குறிப்பிட்டுள்ளது சரியா அல்லது தற்போது எனது மனைவி பெயர் உரிமையாளர் என்று பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ல் உள்ளது என குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் மனைகட்டு தவிர வேறு நஞ்சை புஞ்சை சொத்துகள் இல்லை. பி.சா.ஆ.8 சிட்டாவில் பசலி 420 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 வரி ரசீதில் பி.வீரமணி பட்டாதாரர் என்றும் அவருடைய பட்டா எண் 281 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) 281 என்று எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. பட்டா எண். 281 யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ–9 வரி ரசீது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.9 ல் உள்ள 4–வது வரி ரசீதில் தேதியும், கிராம நிர்வாக அலுவலர் கையொப்பத்திற்கு கீழே உள்ள தேதியும் வேறுபாடாக உள்ளது என்றாலும் ரசீதின் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.10 வழக்கிற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல. தாவா 2வது இன சொத்தில் நானோ எனது மனைவியோ மகளோ எந்த காலத்திலும் சாகுபடி செய்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

S.d/ Veeramani

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

Sd/-P.Ramesh

DISTRICT MUNSIF, THIRUVAIYARU